VICTORIAN
WATER
SAFETY
CERTIFICATE

# ஆரம்பப் பாடசாலை மாணவ மாணவியரது பெற்றோர்களுக்கான முக்கிய தகவல்கள்

உங்கள் பிள்ளை பாதுகாப்பாக இருக்கிறதா?



## VWSC என்பது என்ன, மற்றும் அது ஏன் எனது பிள்ளைக்குத் தேவை?

**தண்ணீரில் பாதுகாப்பாக இருப்பது எப்படி என்பது பிள்ளைகளுக்குத் தெரிந்திருக்கிறதா, மற்றும் தண்ணீரில் பாதுகாப்பாக இருப்பதற்கான இன்றியமையாத் திறன்கள் பிள்ளைகளுக்கு இருக்கின்றனவா என்று Victorian Water Safety Certificate (VWSC, விக்டோரிய மாநில நீர்ப் பாதுகாப்புச் சான்றிதழ்) சோதிக்கும்.**

**ஆண்டு 6 -இன் இறுதியில், விக்டோரிய மாநிலத்திலுள்ள பிள்ளைகள் தமது VWSC-யைப் பெற்று பின்வருவனவற்றை நிரூபித்துக் காண்பிக்க வேண்டும்:**

- அவர்களுடைய அல்லது மற்றவர்களுடைய உயிரைக் காக்கக்கூடிய தண்ணீரில் பாதுகாப்பாக இருப்பதற்கான திறன்கள்
- உயர்நிலைப்பள்ளி முகாம்கள் மற்றும் சுற்றுலாக்களுக்கான தண்ணீர் விளையாட்டுச் செயற்பாடுகளுக்கு அவர்கள் தயாராக உள்ளார்கள் என்பதை
- அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் தண்ணீரிலும் தண்ணீரைச்சுற்றியுமுள்ள செயற்பாடுகளையும், விளையாட்டுக்களையும் அனுபவிப்பதற்குத் தேவையான திறன்களையும் தன்னம்பிக்கையையும் அவர்கள் உருவாக்கியுள்ளதை




## எனது பிள்ளை அவரது VWSC-யைப் பெற என்னால் எப்படி உதவ இயலும்?

+ நீச்சல் மற்றும் VWSC-யைப் பற்றி உங்களுடைய பிள்ளையின் பாடசாலையைக் கேளுங்கள்
+ நீச்சல் கற்றுக்கொள்வதற்கான பாடங்கள் மற்றும் VWSC-யைப் பற்றி உங்களது உள்ளூர்ப் பகுதியிலுள்ள நீச்சல் தடாகத்திடம் கேளுங்கள்
+ உங்கள் பிள்ளைக்குத் தவறாமல் மேற்பார்வையுடன் கூடிய நீச்சல் பயிற்சியைக் கொடுங்கள்
+ தண்ணீரிலும், அதற்கு அருகாமையிலும் இருக்கும்பொழுது எப்போதும் கவனமாகவும், பாதுகாப்பாகவும் இருக்கவேண்டுமென உங்கள் பிள்ளைக்கு நினைவூட்டுங்கள்

இதைப் பற்றி மேலதிகமாகத் தெரிந்துகொள்ள www.lsv.com.au/vwsc வலைத்தளத்தினைப் பாருங்கள் அல்லது மின்னஞ்சல் மூலம் LSV-யுடன் தொடர்புகொள்ளுங்கள்: schoolswimming@lsv.com.au

விக்டோரிய அரசாங்கத்தால் பொதுமக்கள் நீர் பாதுகாப்பு முன்னெடுப்புக்கு நிதி வழங்கப்படுகிறது.

VICTORIA State Government

Life Saving Victoria